1974 ஏப்ரல் 15]

7. அறிவிப்பு.

தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு இந்து சமய-அறக்கட்டளைகள் (மூன்றும் திருத்த) சட்ட முன்வடிவு.

(சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 22/1974)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு இந்து சமய-அறக்கட்டளைகள் (மூன்றும் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 22/1974) பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கு ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித்து இருக்கிறார்கள்.

6. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(உ) தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு இந்து சமய-அறக்கட்டளைகள் (மூன்றும் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு 22/1974).

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: பேரவைத் தலைவரவர்களே,

"தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு இந்து சமய-அறக்கட்டளைகள் (மூன்றும் திருத்த) சட்ட முன்வடிவு * (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 22/1974) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்று நான் முன் மொழிகிறேன்

தமிழ்நாடு (மாற்றப்பட்ட பகுதி) 1959-ம் ஆண்டு இணைக்கப்பட்ட, இணைக்கப்படாத தேவஸ்வங்கள் சட்டத்தினையொட்டி (தமிழ் நாடு சட்டம் 30/1959) மாற்றப்பட்ட பகுதியிலுள்ள, அதாவது திருநெல்வேலி மாவட்டத்தின் செங்கோட்டை வட்டத்திலும், கன்னியாகுமரி மாவட்டத்திலும் உள்ள இணைக்கப்பட்ட, இணைக்கப்படாத தேவஸ்வங்களையும், அவற்றின் சொத்துக்கள், நிதிகள் ஆகியவற்றையும் நிர்வகிக்க, மேற்பார்வையிட அவற்றின் மீது கட்டுப்பாடு செலுத்துவதற்காக, மாநிலங்கள் சீரமைக்கப்பட்ட பின்னர், கன்னியாகுமரி தேவஸ்வக் குழு அமைக்கப்பட்டது. மாற்றப்பட்ட பகுதிகளில் 458 இணைக்கப்பட்ட தேவஸ்வங்களும், 32 இணைக்கப்படாத தேவஸ்வங்களும் உள்ளன. தேவஸ்வக் குழுவின் உறுப்பினர்களிடையே ஒத்துழைப்பு இல்லை என்று இந்து சமய அறநிலைய ஆணையாளர் தெரிவித்துள்ளார். இதன் விளைவாக தேவஸ்வங்களின் நிர்வாகம் பாதிக்கப் பட்டுள்ளது.

---

* 9—4—1974 தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.